**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3452/ஆ5/2024, நாள். 10.10.2024**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மற்றும் பள்ளிக்கல்வித்துறை மற்றும் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தி வரும் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் (SIDP 3.0) 2024 – 2025ம் ஆண்டு திட்டம் செயல்படுத்தப்படும் – அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் வழிகாட்டி ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவில் பயிற்சி வழங்குதல் – தொடர்பாக

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.048647/எம்1/இ1/2024, நாள். 07.10.2024

•••••

பார்வையில் கண்ட செயல்முறைகளின் படி தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமும், யுனிசெப் மற்றும் பள்ளிக்கல்வித் துறையும் இணைந்து அனைத்து மாவட்டத்திலும் உள்ள அரசு / அரசு உதவிபெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் 2024–2025 (School Innovation Development Project 3.0) என்கிற திட்டத்தினை செயல்படுத்தப்படவுள்ளது. தமிழ்நாட்டில் திறமையான தொழில் முனைவோர்களை உருவாக்க, பள்ளி தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தமிழக அரசால் செயல்படுதப்பட்டு வருகிறது.

பள்ளி மாணவர்களில் புதிய தொழில் கண்டுபிடிப்புக்களை ஊக்குவிப்பது தொழில் முனைவோர் கலாச்சாரத்தை வளர்ப்பது, தொழில் முனைதல் மற்றும் தலைமைத்துவ பண்புகளை உருவாக்குதல் போன்ற பல்வேறு பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தினை தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமும், யுனிசெப் மற்றும் பள்ளிக்கல்வித் துறையும் இணைந்து செயல்படுத்திவருகிறது.

இதன் தொடர்ச்சியாக மாவட்ட முதன்மைக் கருத்தாளர்களுக்கான பயிற்சியினை 38 மாவட்ட சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் சார்பில் சென்னையில் வழங்கப்பட்டது.

இதன் அடுத்த கட்டமாக மாவட்ட முதன்மைக் கருத்தாளர்களின் வாயிலாக அனைத்து அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் உயர்நிலைப் பள்ளிக்கு 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை ஒரு வழிகாட்டி ஆசிரியரும் மேல்நிலைப் பள்ளிக்கு 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை இரண்டு (பட்டதாரி / முதுகலை பட்டதாரி) வழிகாட்டி ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவில் ஒரு நாள் பயிற்சி கீழ்காணும் படி வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் குறித்தும் வழிகாட்டி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பங்கேற்பு பற்றியும், அப்பயிற்சியின் மூலம் இணைய தளத்தினை கையாளுவது குறித்தும் மற்றும் மாணவர்கள் இணையதளத்தினை பயன்படுத்த வைப்பது குறித்தும் மண்டல / மாநில அளவிலான போட்டிகளுக்கு வழிகாட்டி ஆசிரியர்களுடன் மாணவர்களை அனுப்பி வைத்தல் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

எனவே, இணைப்பில் கண்டுள்ள தங்கள் பள்ளியில் உள்ள பட்டதாரி / முதுகலை பட்டதாரி ஆசிரியர்களை குறிப்பிட்ட தேதியில் பயிற்சியில் கலந்துக்கொள்ள அனுப்பிவைக்குமாறு தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண். | பயிற்சி நடைபெறும் நாள் | பயிற்சி நடைபெறும் நேரம் | பயிற்சி நடைபெறும் இடம் | பங்குபெறும் ஒன்றியங்கள் விவரம் |
|---|---|---|---|---|
| 01 | 15.10.2024 (செவ்வாய் கிழமை) | காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | ஒருங்கிணைந்த பள்ளி அலுவலகம், கூட்ட அரங்கில் (SSA), காந்திநகர், வேலூர் மாவட்டம். | குடியாத்தம், பேர்ணாம்பட்டு, கே.வி. குப்பம் ஒன்றியங்கள் |
| 02 | 18.10.2024 (வெள்ளிக் கிழமை) | காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | | கணியம்பாடி, அணைக்கட்டு, காட்பாடி, வேலூர் புறநகர், வேலூர் நகர் ஒன்றியங்கள் |

SIDP வழிகாட்டி ஆசிரியர்கள் பயிற்சிக்கு வரும்போது கீழ்காணும் விவரங்கள் கண்டிப்பாக கொண்டு வர வேண்டியவை –

1. பள்ளியின் UDISE NUMBER
2. தலைமையாசிரியர் பெயர், தலைமையாசிரியர் தொலைபேசி எண் மற்றும் பள்ளியின் மின்னஞ்சல் விவரம்
3. வழிகாட்டி ஆசிரியர் தங்களது SMART PHONE கண்டிப்பாக கொண்டு வர வேண்டும்.
4. வழிகாட்டி ஆசிரியரின் மின்னஞ்சல் முகவரி
5. பயிற்சிக்கு வரும்போது தங்கள் பள்ளி மாணவர்களின் விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் முழுமையாக பூர்த்தி செய்து கொண்டு வர வேண்டும்.

(குறிப்பு – உணவு இடைவேளையில் அனைத்து வழிகாட்டி ஆசிரியர்களுக்கும் உணவு வழங்கப்படும்)

இணைப்பு –

1. வழிகாட்டி ஆசிரியர்களின் பெயர்பட்டியல்
2. SIDP 3.0 படிவங்கள்.

10/10/24

10.10.24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1. தலைமையாசிரியர்கள்,
   அனைத்து அரசு /அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்.
2. சம்பந்தப்பட்ட பள்ளி ஆசிரியர்கள்,
   (தலைமையாசிரியர்கள் மூலமாக)
3. மாவட்ட சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர்,
   முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர்.

நகல் –

1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித் திட்டம்) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி), வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)